



ஏழாலை தெற்கு விழுசிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டன்,
நியூ மோல்டனை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## திருமதி சுசீலா முருகதாஸ்

அவர்களின் இறுதிப்பயணத்தைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**12.02.2001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


“மனங்கரைந்து மலங் கெடுக்கும்
வாசகத்தின் மாண்டோர்கள்
கனஞ்சடை யென்றுருவேற்றிக்
கண்மூடிக் கதறுவாரோ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திருமதி சுசீலா முருகதாஸ்



பற்றுப்பெற்றநாள்
**21.7.1952**

பற்றறுத்தநாள்
**13.01.2001**

## திதி நிர்ணய வெண்பா

இனியுளவாம் விக்கிரம மார்கழித் திங்களில்
தனியுளவு அபரபக்க சதுர்த்தியாம்-கனியிவள்
தமிழினியள் தையல் சுசீலா சேர்ந்தனள்
தலைமேற் கொண்டான் அடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம் அன்புச் செல்வங்களை அன்புடன் வளர்த்து**
**அமரராகிவிட்ட அன்புத் தாய்க்கும் என் ஆருயிர் மனையாளுக்கும்**
**இந் நினைவுப் பாமாலையைச் சமர்ப்பிக்கிறோம்.**

உற்றார் உறவினர்களுக்கு இன்முகம் காட்டி
இல்வாழ்க்கையின் இலக்கணமாய் நின்று
விருந்தோம்பலில் தன்னிகரற்று
பண்பும் பாசமும் நிறைந்த பேரொளியாய்
அன்புடன் எம்மைப் பேணிக்காத்து
மக்களுக்கு ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
கணவனுக்கு மதிமந்திரியாய் நின்று
எல்லோரையும் நல்வழி நடத்தி
வையத்துள் சீரும் சிறப்பும் பொழிய
சிவலோக நாயகன் சேவடிக்குள் வாழ்ந்து
இன்று வானுறையும் அமரராகிவிட்ட
எமது அன்புத் தெய்வத்தின் பொன்னடிக்குக்
காணிக்கையாக இம்மலரைச் சமர்ப்பிக்கிறோம்

-கணவன் பிள்ளைகள்

## பட்டணத்தார் பாடல்

*பிறக்கும் பொழுது கொடுவந்தது*
*இல்லை பிறந்து மண்மேல்*
*இறக்கும் பொழுது கொடுபோவது*
*இல்லை இடைநடுவில்*
*குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது*
*என்று கொடுக்க அறியாது*
*இறக்கும் குலாமருக்கு என்சொல்லு*
*வேன்கச்சி ஏகம்பனே.*

*கல்லாப் பிழையும் கருதாப்*
*பிழையும் கசிந்து உருகி*
*நில்லாப் பிழையும் நினையாப்*
*பிழையும்நின் அஞ்செழுத்தைச்*
*சொல்லாப் பிழையும் துதியாப்*
*பிழையும் தொழாப் பிழையும்*
*எல்லாப் பிழையும் பொறுத்தருள்*
*வாய்கச்சி ஏகம்பனே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

பிடியதன் உருவுமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

## தேவாரம்

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவனன்றே.

மண்ணில் நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணிநல் லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணின் நல் லஃதுறுங் கழுமல வளர்நகர்ப்
பெண்ணில் நல் லாளொடும் பெருந்தகையிருந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த நாளும் இனிவாழு நாளும் இவை அறிதிரேல்
வீழ்ந்த நாளெம் பெருமானை ஏத்தா விதியில்லீர்காள்
போழ்ந்த திங்கட் புரிசடையினான்றன் புகலுரையே
சூழ்ந்த உள்ளம் உடையீர்கள் உங்கள் துயர் தீருமே.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது முன் பணியே
அமரர்கள் செய்வது முன் பணியே
பெற்றுமுகந்தது கந்தனையே
பிரம புரத்தை யுகந்தனையே.

## திருநாவுக்கரசு நாயனார்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம்பாலிக்கு மாறுகண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பல செய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

## சுந்தரமூர்த்தி நாயனார்

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தருவானைப்
போகமுந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தனைமைய னென்றறிய வொண்ணா
எம்மா னையெளி வந்தபிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆருரானை மறக்கலு மாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவாசகம்

## சிவபுராணம்

***தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி***
***அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே – எல்லை***
***மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்***
***திருவாசகம் என்னும் தேன்***

*நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க*
*கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க*
*ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க*
*ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க*
*வேகங் கொடுத்தாண்ட வேந்தனடி வெல்க*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க*
*புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க*
*கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க*
*சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க*
*ஈசனடி போற்றி எந்தையடி போற்றி*
*தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி*
*நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி*
*மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி*
*சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி*
*ஆராத இன்பம் அருளுமலை போற்றி*
*சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்*
*அவனரு ளாலே யவன் றாள் வணங்கிச்*
*சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை*
*முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்*
*கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி*
*எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி*
*விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்*
*எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்*
*பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராயத் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலாவுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதிமலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனாரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராதுநின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதேயளவிலாப் பெம்மானே
ஓராத ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராயுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது
உன் அடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர் வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே
(அருணகிரிநாதர்)

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவரத்தின மாலை

### காப்பு

ஆக்கும்தொழில் ஐந்து அரன் ஆற்றநலம்
பூக்கும் நகையாள் புவனேஸ் வரிபால்
சேர்க்கும் நவரத்தினமாலையினைக்
காக்கும் கணநா யகவா ரணமே!
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே

### வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்க்
கண்மூடி நெடுங் கனவான தவம்
பெற்றும் தெரியார் நிலை எண்ணில் அவம்
பெருகும் பிழையென் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க் கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட் சுனையே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே

### நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக் குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
நினை வற்றெளியேன் நின்றென் அருள்வாய்
வாலைக் குமரி வருவாய் வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே

### முத்து

முத்தே வருமுத் தொழிலாற் றிடவே
முன்னின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவா ஸினியே சரணம்
தத்தே றியநான் தனயன் தாய்நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தே றுததிக்கு இணை வாழ் வுடையேன்
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே

### பவளம்

அந்தி மயங்கிய வான விதானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்தமேடை
சிந்தை நிரம்ப வளம்போழி பாரோர்
தேன் பொழி லாமிது செய்தவள் யாரோ
எந்த இடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுப வர்க்கருள் எண்ணமி குந்தாள்
மந்திர வேத மயப்பொரு ளானாள்
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே'

### மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதி லயமே இசையே சரணம்
அரஹர சிவஎன் றடியவர் குழும
அவரருள் பெற அரு ளமுதே சரணம்
வரநவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!

### கோமேதகம்

பூமே வியநான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக் தியெனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமே தகமே குளிர்வான் நிலவே
குழல்யாழ் மொழியே வருவாய் தருவாய்
மாமே ருவிலே வளர்கோ கிலமே
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!

### பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராகவி காசவி யாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி
சாம்பவி சந்திர கலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத சொரூபிணி நித்யகல் யாணி
மஞ்சுள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!

### வைடூரியம்

வலையொத்த வினை கலையொத்த மனம்
அருளப் பறையாற் றொலியொத் தவிதால்
நிலையற் றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலையற் றசைவற் றநுபூ திபெறும்
அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!

### நூற்பயன்

எவர் எத் தினமும் இசைவாய் லலிதா
நவரத் தினமாலை நவின் றிடுவார்
அவர் அற்புதசக் தியெலாம் அடைவார்
சிவரத் தினமாய்த் திகழ்வா ரவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துகக நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதி அணி சூலினி மன்மத பாணியளே!
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே!
கங்கண பாணியன் கனிமுகம் கண்ட நல் கற்பகக் காமினியே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாஷி!

கான் உறுமலர் எனக் கதிர் ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்:
தான் உறு தவஒளி தார்ஒளி மதிஒளி தாங்கியே வீசிடுவாள்:
மான் உறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்:
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாஷி!

சங்கரி! சௌந்தரி! சதுர் முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே!
பொங்கு அரிமாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே!
எம்குலம் தழைத்திட எழில் வடிவுடனேஎழுந்தநல் துர்க்கையளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாஷி!

தணதன தந்தண தவில் ஒலி முழங்கிடத்தண்மணி நீ வருவாய்:
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்:
பணபண பம்பண பறைஒலி கூவிடப்பண்மணி நீ வருவாய்:
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாஷி!

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே!
கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேழனைக்கொடுத்த
நல் குமரியளே!
சங்கடம் தீர்த்திடச் சமர் அது செய்தநல் சக்திஎனும் மாயே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாஷி!

எண்ணியபடி நீ அருளிட வருவாய்எம்குல தேவியளே!
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்!
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாஷி!

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே! சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்:
படர் தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்:
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாஷி!

ஜெய ஜெய பாலா! சாமுண்டேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீ தேவி!
ஜெய ஜெய துர்க்கா! ஸ்ரீ பரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீ தேவி!
ஜெய ஜெய ஜெயந்தி! மங்கள காளி ஜெய ஜெய ஸ்ரீ தேவி!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! கிருபாகரி! துக்க நிவாரணி காமாஷி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பம் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய் :
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.

## ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் ஸ்தோத்திரம்

கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோயில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்தவல்லி தெய்வயானை அம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே (கற்பூர)

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரம் எரித்தோன் புறம் இருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
கார்இருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி (கற்பூர)

உன்னிடத்தில் செல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீஇருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் முறையோ அம்மா
சின்னவளின் குரல்கேட்டு உன்முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு (கற்பூர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்இரண்டும் உன்உருவே காணவேண்டும்
கால்இரண்டும் உன்அடியே நாடவேண்டும்
பண் அமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பக்தியோடு கைஉனையே கூடவேண்டும்.
எண்ணம் எல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையது ஆகவேண்டும்
மண் அளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளையும் தீரும் அம்மா (கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சில் உன் திருநாமம் வழியவேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருகவேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழ வேண்டும்
சுற்றம் எல்லாம் நீடுழி வாழவேண்டும்
ஜோதியிலே நீஇருந்து ஆள வேண்டும்
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா. (கற்பூர)

அன்னைக்கு உபகாரம் செய்வதுண்டோ?
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமை இன்றி காவல் உண்டோ?
கன்றுக்கு பசுவன்றி சொந்தம் உண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நான் உன்றன் பிள்ளையன்றோ? (கற்பூர)

அன்புக்கே நான் அடிமையாக ஆக வேண்டும்
அறிவுக்கே என் காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என் நெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என் பக்கம் இவைஎல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும் (கற்பூர)

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்அதனில் சக்தி இல்லை
நடந்திடவோ கால் இரண்டில் ஆகவில்லை
செம்பவளவாய் அழகி உன் எழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவும் இல்லை (கற்பூர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலவாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாள் இல்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை (கற்பூர)

## அபிராமி அந்தாதி

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமென்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு
தீங்கில்லையே.

## இலக்குமி தோத்திரம்

மூவுலகு மிடரியற்று மடலவுணனுயி
ரொழிய முனிவு கூர்ந்த
பூவையுறள் திருமேனியருட் கடவுளகன்
மார்பிற் பொலிந்தோன்றித்
தேவருலகினும் விளங்கும் புகழ்க்கொல்லா
புரத்தினிது சேர்ந்துவைகும்
பாவையிருதாடொழு துபழமறைத்தேர்
குறுமுனிவன் பழிச்சுகின்றான்.

கொழுதியிசை யளிமுரலுந் தாமரைமென்
பொகுட்டிலுறை கொள்கைபோல
மழையுறமுந் திருமேனி மணிவண்ண
னிதயமலர் வைகுமானே
முழுதுலகு மினிதீன்ற வருட்கொம்பே
கரகமலமுகிழ்த் தெந்நாளுங்
கழிபெருங்கா தலிற்றொழுவோர் வினைதீர
வருள்கொழிக்குங் கமலக்கண்ணாய்.

## சரஸ்வதி

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஜெய துர்க்காயை நம

# ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

(பண்: நாதநாமக்கிரியை)



பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரியுன்னைப் பாடி டுமெ
ஹநஹந தகதக பசபச வெனவே
தளிர்த் திடுஜோதி யான வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈச்வ ரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவிமணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க் கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசி னியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமக ளானாய் கலைமக ளானாய்
மலைமக ளானாய் துர்க் கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண் மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாய கியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

கோவுறை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கை யளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சி யளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

ஜெயஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரணி சந்த்ர கண்டி னியே
ஜெயஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்ய யளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க் கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹாரதி

ஓம் ஜெய ஜெய சக்தி - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய
ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா ஓம் ஸ்ரீ ஜெய

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம்
அடைய (மறைய) அம்மம்மா தேவையெல்லாம்
அடைய (மறைய)
பக்தி பெருகிட பாடி உருகிட பணிப்பாய்
அன்பிலெம்மை ஓம் ஸ்ரீ ஜெய
இரண்டுகள் போக மூன்றுகள் அகல ஈசுவரி
வரமருள்வாய் அம்மம்மா ஈசுவரி

## வரமருள்வாய்

கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ ஜெய
காசினியெங்கும் வேற்றுமை போக கருத்தினில்
அன்பருள்வாய் அம்மம்மா கருத்தினில்
தேசுடன் வாழ காட்டடி காக்ஷி தேவியுன்
அடைக்கலமே ஓம் ஸ்ரீ ஜெய
நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான நல்லொளி
தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞாலத்திர்க் கமைதியைத்தா
ஓம் ஸ்ரீ ஜெய
ஓம் கணபதி ஸாயி ஷண்முக நாதா ஓம்
த்ரிகுணாதீத க்ருஷ்ணா
ஓம் ஸ்ரீராம மஹாதேவ சம்போ - ஓம் ஜெய
ஜெகத்ஜெனனி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன் துணை
தேவராய சுவாமிகள் பாடிய

# கந்தர் சஷ்டி கவசம்

*காப்பு*

*நேரிசை வெண்பா*

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம்
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்து ஓங்கும் நிஷ்டையும் கைகூடும், நிமலர்
அருள் கந்தர் சஷ்டி கவசந்தனை.

*குறள் வெண்பா*

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

**நூல்**

*நிலைமண்டில ஆசிரியப்பா*

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்,
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடன ஞ்செய்யும் மயில் வாகனனார்

கையில் வேலால் எனைக்காக்க என்று உவந்து
வரவர வேலாயுதனார் வருக,
வருக வருக மயிலோன் வருக,
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக,
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக,
ஆறுமுகம் படைத்த ஐயா வருக,
நீறுஇடும் வேலவன் நித்தம் வருக,
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக,

சரவண பவனார் சடுதியில் வருக,
ரஹண பவச, ரரரர ரரர
ரிஹண பவச, ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ, வீரா நமோ நம
நிபவ சரஹண, நிற நிற நிறனெ
வசர ஹணப வருக வருக,
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக,
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக்காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும், தனிஒளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும், அணிமுடி ஆறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறுஇடு நெற்றியும், நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும், பவளச் செவ் வாயும்,
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்,
ஆறுஇரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும், பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்,
முப்புரி நூலும், முத்து அணி மார்பும்
செப்பு அழகு உடைய திருவயிறும் உந்தியும்

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நல்சீராவும்,
இருதொடை அழகும், இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொக மொக மொக மொக மொக மொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு, டிகுகுண டிகுண
ரரரர ரரரர, ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி, ரிரிரிரி ரிரிரி

டுடுடுடு டுடுடுடு, டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து, மயிலோன் விந்து
முந்து முந்து, முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை, உறுதியென்று எண்ணும்

எனதலை வைதது உன இணையடி காகக!
என்உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத்து இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேர்இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே வாக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண்ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பனைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரைஇருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்க பாவம் பொடிபட
பில்லிசூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம், வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்ணைத் தொடரும் பிரமாட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும், மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும், சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்,

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும், நீள்முடி மண்டையும்
பாவைகள் உடனே, பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதர்எனைக் கண்டால் கலங்கிட,

அஞ்சி நடுங்கிட, அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி, மதிகெட்டு ஓட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு, கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதில்லக
சொக்கு சொக்குச் சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து, கூர்வடி வேலால்

பற்று பற்று, பகலவன் தணல்எரி
தணல்எரி தணல்எரி, தணல்அது ஆக
விடுவிடு வேலை, வெருண்டது ஓட
புலியும் நரியும், புன்நரி நாயும்
எலியும் கரடியும், இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயிர் அங்கம்
ஏரிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி,
பற்குத்து, அரணை பருவரை யாப்பும்,
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லாது ஓட, நீ எனக்கு அருள்வாய்
ஈரேழ் உலகமும், எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காக
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவணபவனே சைலொளி பவனே
திரிபுர பவனே! திகழொளிபவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள், கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை
இடும்பனை வென்ற, இனியவேல் முருகா
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர் காமத்து உறை, கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ், பால குமாரா!
ஆவினன் குடிவாழ், அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா!
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே!
காரார் குழலாள், கலைமகள் நன்றாய்
என்நா இருக்க, யான் உனைப்பாட,
எனைத் தொடர்ந்து இருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன், பரவசம் ஆக
ஆடினேன், நாடினேன், ஆவினன் பூதியை

நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே, உன் அருள் ஆக
அன்புடன் இரட்சி, அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக, வேலாயுதனார்
சித்திபெற்று, அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்,

வாழ்க வாழ்க வாரணத் துவசம்,
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்கறு
எத்தனை குறைகள், எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் செய்தே யிருப்பினும்
பெற்றவன் நீகுரு, பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே;
பிள்ளை என்று, அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீது, உள்மனம் மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்ற அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில், கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்,
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய,
அஷ்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர், செயலது அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்,
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்,
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழி யாய்க் காண மெய்யாய் விளங்கும்,
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்,
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து எனது உள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவு ஆகச்
சூரபத்மாவை துணித்த கையதனால்
இருபத் தெழுவர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி,
எனைத் தடுத்து ஆட்கொள என்தனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக்கு ஓர் அரசே!
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்,

**ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுசீலா முருகதாஸ் அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்.

ஈழவள நாட்டின் வட பகுதியில் சிரசுபோல் விளங்கும் யாழ்குடா நாட்டிலே நிலவளம், நீர்வளம், பொருள்வளம் பொருந்திய ஏழாலை என்னும் பேரூரின் தென்பகுதியில் 1952ம் ஆண்டு யூலைத் திங்கள் 21ம் நாள் நன்னாளில் சின்னையா, சிவசோதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாக இப்பூவுலகில் தோன்றி சுசீலா (குணவதி) என்னும் சிறந்த நாமம் பூண்டு இப்பூவுலக வாழ்வை ஆரம்பித்தார் அமரர் சுசீலா அவர்கள்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை (பாலர் வகுப்பு) உடுவில் மகளிர் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியைத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், உயர் கல்வியை மீண்டும் உடுவில் மகளிர் கல்லூரியிலும் கற்றார். பின் யாழ் கொன்வென்ற் (Convent) கல்லூரியில் மனையியலைப் பயின்று டிப்புளோமா என்னுஞ் சிறப்புச் சான்றிதழைப் பெற்றார். பள்ளிப் பருவத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், சக மாணவர்கள் ஆகியோரின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

அமரர் சுசீலா தன் சகோதரர்களாகிய ஸ்வர்ணா, சாந்தினி, சோமஸ்கந்தா, சியாமளா, சுமித்திரா மற்றும் மாமன், மாமி, மச்சாள்மார் ஆகியோரது அன்புக்கும் ஒற்றுமைக்கும் பாத்திரமாக விளங்கினார். இளம் பராயத்திலிருந்தே ஒரு நல்ல தமிழ்ப் பெண்ணுக்குரிய நல்லொழுக்கம், கடமை, பொறுமை, கீழ்ப்படிதல், பரோபகாரம், புன்முறுவல் பூத்த முகம், எல்லோரையும் எப்போதும் உபசரிக்கும் நற்பண்பு முதலிய நல்ல அணிகலன்களைத் தனதாக்கி
வளர்ந்து மணப்பருவத்தினை அடைந்தார்.

1978ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் திகதி கொக்குவில் காலஞ்சென்ற சுப்பிரமணியம், பாக்கியம் தம்பதிகளினது ஏக புத்திரனும் ஸ்ரீலங்கா நீர்ப்பாசன இலாகாவில் தொழில் நுட்ப உதவியாளராகப் (Technical Assistant) பணி புரிந்த முருகதாசை சுசீலாவுக்குச் சைவ ஆகம முறைப்படி வேதியர் வேதம் ஓத மங்கள வாத்தியங்கள் இன்னிசை முழங்கச் சபையோர் ஆசி கூறப் பெரியோர்கள் திருமணஞ் செய்து வைத்தனர்.

திருமணத்தின் பின் கணவர் முருகதாஸ் தொழில் புரிந்த முருங்கன், செங்கலடி, உன்னிச்சை, மூதூர், திருகோணமலை, ஆகிய இடங்களில் கணவருடன் அரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தருக்குரிய வதிவிடங்களில் தங்கி இல்வாழ்க்கையை இனிதே நடாத்தினார்.

"கணவனே கண் கண்ட தெய்வம்; இல்லறம் அல்லது நல்லறம் அன்று; கொண்டான் குறிப்பு அறிவாள் பெண்டாட்டி; இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை;" என்ற ஆன்றோரின் வாக்குகளுக்கு ஏற்ப சுசீலா என்றும் எப்பொழுதும் கணவனின் குறிப்பினை அறிந்தும் வந்தாரை இன்முகத்துடன் வரவேற்று, உபசரித்தும் இல்லறத்தை நல்லறமாக நடாத்தினார். தனது பிள்ளைகளையும் பெறாமக்களையும் பாகுபாடின்றிப் பராமரித்தார். உதாரணமாக சுமன் என்னும் பெறாமகன் தன் அன்னை தடுத்தாலும் பெரியம்மாவைக் காணாது வாழ்ந்தது குறைவு என்றே கூறலாம்.

முருகதாஸ்—சுசீலா இல்வாழ்க்கையின் சிறப்புக்குப் பரிசிலாக எல்லாம் வல்ல இறைவன் மைதிலி, ஹரிஹரன், குறிஞ்சிக்குமரன், காயத்திரி ஆகிய சற்புத்திரர்களை ஈந்துள்ளார்.

இவ்வாறு ஈழத்தில் வாழ்ந்து வந்த வேளையில் ஆங்கே கொடிய இனக் கலவரம் ஆரம்பித்தது. அவ்வேளை முருகதாஸ் மயிர் இழையில் உயிர்தப்பி லண்டன் வந்தார். அதனைத் தொடர்ந்து சுசீலாவும் தன் மழலைச் செல்வங்களுடன் வீடுவாசல், உடமைகள் அனைத்தையும் விட்டு 1989ம் ஆண்டு தன் கணவனுடன் சேர்ந்து கொண்டார்.

லண்டனில் பல இன்னல்கள், இடுக்கண்கள் ஆகியவற்றின் மத்தியிலும் சுசீலா தன் கணவனுக்குப் பலவழிகளிலும் உறுதுணையாக இருந்தார். அயராது உழைத்தார்.

பெற்றோரின் முதல் முத்தாகப் பிறந்து செல்வமாக வளர்ந்தவர். தன் குடும்பத்துக்காக உடம்பு அலுப்புப் பாராது உழைத்தும் பிள்ளைகளையும் கணவனையும் கண்ணை இமை காப்பது போன்று பல வழிகளிலும் பேணிக்காத்தும் வந்துள்ளார்.

உற்றார், உறவினர், பழகியவர்களது மங்கல, அமங்கல நிகழ்வுகழில் தவறாது கணவருடன் பங்கு பற்றினார். சந்தர்ப்பம் கிடைக்கும் வேளைகளிலெல்லாம் தொலைபேசியில் அன்பர்களுடனும், தேவையானவர்களுடனும் தன் உடம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுப்பையும் பொருட்படுத்தாது உள்நாட்டிலும், அந்நிய தேசங்களிலும் உள்ளவர்களுடன் தொலைபேசியில் குசலம் (சுகம்) வினாவிக் கதைத்தார்.
இந்நேரத்திற்றான் காலன் சுசீலாவைக் கண்காணிக்க ஆரம்பித்தான் போலும். கற்பவர்களுக்குத்தான் பரீட்சை என்றும், உத்தமர்களுக்குத்தான் சோதனைகள் பல என்றும் பெரியோர்கள் கூறுவர். இதற்கு சுசீலா விதிவிலகக்காக முடியுமா? ஒரு சாதாரண காய்ச்சலின் (Flu) வேடத்தின் வடிவில் வந்த கொடிய யமன் ஜனவரி மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் கிங்ஸ்ரன் வைத்தியசாலைக்குச் சுசீலாவைக் கொண்டு செல்லும்படி திடீரெனத் தூண்டினான். அங்கே சென்ற மறுநாள் சனிக்கிழமை காலை 6.15 மணியளவில் காலம் இம்மியும் தவறாத காலன் சுசீலாவின் ஆவியைத் திடீரென எடுத்தான். தனது இணை பிரியாக் கணவர், அருமைப் பிள்ளைகள், அன்புப் பெற்றோர், மாமன்மார், மாமிமார், சகோதரர், பெறாமக்கள், சித்தப்பாமார், சித்திமார், உடன்பிறவாச் சகோதரர், மச்சாள்மார், மச்சான்மார், உற்றார், உறவினர் ஆகிய அனைவரையும் மீளாத் துயரக் கடலில் ஆழ்த்திப் பூவோடும் பொட்டோடும் அன்னை பராசக்தியின் பாதாரவிந்தங்களை அடைந்தார்.

வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் ஸ்ரோன்லி அன்னை ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாளைப் பால், பழம் முதலிய அர்ச்சனைப் பொருட்களைக் கைகளில் ஏந்தி குடும்பத்தவர் சகிதம் சென்று வழிபட்டு வந்தார். கந்த சட்டி விரதத்தை இருபத்திரண்டு ஆண்டுகள் கணவருடன் உபவாசமிருந்தார். விம்பிள்டன் விநாயகர் ஆலயத்தில் கந்தசட்டிப் பூசையைச் செய்து வந்தார்கள். சென்ற வருடம் விம்பிள்டன் பிள்ளையார் ஆலயத்தில் கந்தசட்டிப் பூசையை அடுத்து இருநாட்கள் இவர்கள் செய்ய முருகப் பெருமான் தூண்டினார். இவற்றின் பயனாக வேதனைகள் இன்றிப் "பூவுலக வாழ்வை விட்டு இறைவனடியினைச் சேரப்போகிறேன்" என்றுமே உணராமல் மெல்லெனக் கணவன், பிள்ளைகள், பெற்றோர், சகோதரர் மற்றும் உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் கண்ணீர் விட்டுக் கதற இறைவனடியைத் தழுவிக்கொண்டார்.

இறைவன் திருவடியைச் சேர்ந்த சுசீலாவின் ஆன்மா சாந்தி நிலை அடைய நாம் அனைவரும் சிந்தனைக்கு அரிய, வந்நனைக்கு உரிய இறைவன் திருவடியைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mummy

Our mum; her most precious qualities of love, kindness and deep sincerity could be seen in how she treated everyone and in everything she did. To comfort one in pain and sorrow, to praise ones good efforts, or even just a smile of compassion and happiness could show how much she cared for others. No matter how busy she was, or the troubles she had, there was always time for her family and friends.

So many people would turn to umma for advice or aid of any kind, which she would give gladly; she would never turn anyone away. This was another great quality my mother had. She would always treat people fairly, equally, and as individuals. Whenever other people, young or old came to visit, it was as if they were all like her own family, and never strangers.

She had a great liking of children especially, where she would often call them to her, feed them, and she would speak to them so softly that you would think that they too had always been her children.

My mum had always been very affectionate, and caring which was one of the reasons why we were so close. I may only be fifteen years old, but I feel as if I have known umma for a whole lifetime and consider her to be one of my best friends.

My most treasured memory will always be of how I would constantly tell her that I loved her, even till this very day. I have always believed that the mother-daughter relationship is very important, and to hear from friends that they cannot remember when they told their mothers that they loved them makes me contented that I had before she died.

There are many people in your life that you love, but you only have one mother in a lifetime, and so to have told and shown your mother of your love for her, and to know that she too knew how much you cared for her, brings me the greatest happiness when in remembrance of her.

Mummy, my love for you gains strength as I gain strength as a person. We all miss you very dearly, and the memories of you will never be forgotten in our hearts.

Thank you for being our mother.



-By Gayathri Murugathas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம் ஆருயிர் அக்கா**

நீங்கள் திடீரென எங்களைத் தவிக்க விட்டுப் பிரிவீர்கள் என்று நாங்கள் கனவிலும் எண்ணவில்லை. அன்பின் அக்காவே, உங்கள் பிரிவு எம்மை மிக மிக வாட்டுகின்றது. உங்கள் பிள்ளைகளுக்கும் அத்தானுக்கும் என்றும் உறுதுணையாய் 'நாங்கள் இருப்போம்' என்று உங்களுக்குச் சொல்லுகின்றோம், உங்களின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**-அன்புச் சகோதரர்கள்.**

**எம் அருமைச் செல்வ மகளே**

நாங்கள் அழுவோம், குளறுவோம் என்று எண்ணியோ நீர் திடீரென எம்மை விட்டுப் பிரிந்தீர். உமது பிரிவு எமக்குப் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. எம் செல்வமே, நீர் எம்மை இம் முதுமையில் பராமரிப்பீர் என்று இருந்தோம். அதற்கு மாறாக நீர் உமது பிள்ளைகளை எம்மைப் பராமரிக்கும்படி விட்டுச் சென்றுள்ளீர். உமது அழகிய தோற்றம், நடை, உடை, செயல் என்பவைகளைச் சிந்தித்து மனம் தீ இடைப்பட்ட மெழுகு போல் உருகுகின்றது. உம்மைப் பெற்ற நாங்கள் சுகபலமாய் இருக்கும் வேளையில் கொடிய யமன் உம்மைத் திடீரென எடுத்து மாயமாய் மறைந்தானே. இஃது என்ன கொடுமை! எப்படிச் சகிப்பது? எம் அன்புச் செல்வமே, உமது ஆன்மா மோட்ச நிலை அடைய எம் பரம் பொருளை வேண்டுகின்றோம்.

**-அன்பு அப்பா அம்மா**

**Dear Kurunchi & Family**

I'm Very sorry to hear about your Mum. She was a lovely person to everyone. She was kind, friendly and a joyful person. All though I didn't know her that well she treated me with respect. She made me welcome in the house when I came round. I have written this letter in a sign of respect to your Mum and your family. I'm sorry I didn't attend the funeral on Sunday 21st January as I was unaware of the date. My sympathy is with you and your family.

**Yours Sincerely**
**Richard Glenn**

**V. Gunaratnam**
**27 Cotswold Street**
**Westmead**
**NSW 2145**
**20.01.01**

*இக் கடிதம் கிடைக்கும் போது உங்கள் அனைவரின் மனம் ஓரளவு ஆறுதல் அடைந்திருக்கும் என நம்புகிறோம்.* Time is the best healer of bleeding wounds

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.அருமைப் புதல்வி, சிரேஸ்ட புத்திரி சுசியின் மரணச் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்தோம். ஏனோ ஆண்டவர் இவ்விளையும் பயிரை முளையில் கிள்ளி எடுத்து விட்டார். எங்கள் கண் முன்னாலேயே வாழையிளம் குருத்துப்போல் வளரந்து வந்த பிள்ளைக்கோ இக்கதி நேர்ந்ததென்று அதிக வேதனைப் படுகின்றோம்.

அடக்கம், ஒடுக்கம், பண்பு, சுற்றந்தழுவல் ஆகிய நற் பண்புகள் அடங்கிய இப்பிள்ளை தம் பெற்றோருக்கும், சகோதரருக்கும், உற்ற உறவினர்க்கும் ஒளிவிளக்காய்த் திகழ்ந்தார். பிறந்த வீட்டில் மட்டுமல்ல புகுந்த வீட்டிலும் நன் மனையாள் என்று பெயர் பெற்று அவர்களின் நல்லெண்ணத்தையும், நன்மதிப்பையும், அபிமானத்தையும், நல்லாசிகளையும் பெற்றிருந்தார்.

"தற் காத்துத் தற் கொண்டான் பேணி
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணம் அமைத்து வாழ்ந்து வந்த நங்கை இவள். இவளைப் பெற்ற தாய் தந்தையர்க்கும் மாலையிட்ட கணவனுக்கும் பெற்றெடுத்த மதலைகட்கும் புகழ் ஈட்டிய செம்மல் என்றால் அது மிகையாகாது.

'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்'

இன்று, மைதிலி, சகோதரர் கல்வியிற் சாலச் சிறந்து விளங்குவதற்கு அடித்தளம் இட்ட சிற்பி இவள். தமர் பிறர் என்ற வித்தியாசமின்றிச் சகலருடனும் நன் மதிப்பளித்துச் சீருடன் வாழ்ந்த பிள்ளை.
நாட்கள் கழியலாம். வாரங்கள் செல்லலாம். இல்லை வருடங்கள்தான் மறைந்து போகலாம். இவ்வினிய முகத்துடனும் அரிய பண்புடனும் வாழ்ந்து இவ்வுலகை நீத்து அக்கினியுடன் சங்கமமான சுசியின் நினைவு அன்புக்குரிய எவரின் மனதையும் விட்டகலாது.

இறைவன் தாமே இப்பிள்ளையைத் தன் நேசக் கரங்களில் ஏந்தி இவளின் ஆத்மாவுக்குச் சாந்தியளிப்பாராக.


ஓம் சாந்தி.

மதலையைப் பெறு நாளுந் துன்பம்
வளர்த்திடு நாளும் துன்பம்
வியன் பருவத்தில் துன்பம்
மிக்க நோய் அடையின் துன்பம்
கதமொடு காலன் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இத மொடு வாழு நாள் இவ்வுலகில் எந்நாளோ?

உங்களின் அனைவரின் அன்புக்குரிய

V. Gunalatham
Thevy Gunaratnam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில்
**சுப்பிரமணியம் + பாக்கியம்**

- ஞானேஸ்வரன் + மாலினி
- இன்பமலர் + சபாரத்தினம்
  - ஜெயராஜன்
  - நிறைஞ்சலா
  - கம்சலா
  - சர்மளா
- செல்வமலர் + சித்திவிநாயகப்பிரகாசம்
  - சுபாங்கினி
  - தபோதினி
  - வினோதினி
  - பிரபாங்கினி
- அரியமலர் + ஜெயனொளிபவன்
  - ரவிராஜ்
  - ரஜனி
  - பிரதாபன்
- **முருகதாஸ்**
- இந்திரசோதி + சிவபாலசுந்தரம்
  - பிரசாந்
  - நிரொசந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Subramanian Murugathas*
*50 Albert Road*
*New Malden*
*Surrey*
*KT3 6BS*

*Paul Smith (SD)*
*Tesco Stores Ltd*
*Eagle House*
*290 Lewisham Road*
*Lewisham*
*SE13 7PA*

*020 8218 7156*

*18th January, 2001*

*Dear Thas,*

*I am extremely saddened to hear of your wife's death last week.*

*Suseela was well-liked and respected by all her colleagues at Brooklands store and she will be greatly missed by us all.*

*My colleagues and I send our sincere condolences to you and your family at this very sad time.*

*I there is anything we can do for you during this difficult time, please do not hesitate to contact me.*

*Yours sincerely*
*for and on behalf of*
*TESCO STORES LTD.,*

*Paul Smith*
*Stores Director*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எங்கள் இதயங்களில் கோவில் கொண்டிருக்கும் அணிதிகழ் அமரர் திருமதி சுசீலா முருகதாஸ் அவர்கள் 13.01.01 சனிக்கிழமை பற்றறுத்து பாலிக்கும் சூரியனை அடைந்த போது, எமது ஆறாத்துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், இரங்கல் செய்தி அனுப்பியோருக்கும் 21.01.01 ஞாயிற்றுக்கிழமை அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் 24.01.01 புதன்கிழமை அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், பலவகைகளில் எமக்கு உதவி புரிந்தோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சு. முருகதாஸ் குடும்பத்தினர்

50 Albert Road
New Molden
Surrey

## *Thank You*

We lost our mother unexpectedly and suddenly. We never dreamt that she would leave us so quickly. Her death is a great shock to us. At this sad moment many of you helped us in many ways. We thank everybody who sent sympathy messages, flowers, wreaths and food. We are indeed indebted to you for attending our mother's funeral.

Once again our sincere thanks to you all for attending the mother's 31st day.

Thank you

Mytheli, Hariharan, Kurunchikumaran, Gayathri & Murugathas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
வாசன் அச்சகம் 020 8646 2885